மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

supeedsam.com


21.08.2022 ஞாயிற்றுக்கிழமை

supeedsam.com supeedsam@gmail.com

## 2030வரை ரணிலே ஜனாதிபதி

நாட்டின் ஜனாதிபதியாக எதிர்வரும் 2030 ஆம் ஆண்டு வரை ரணில் விக்கிரமசிங்கவே பதவி வகிப்பார். அதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது. எனவே சகல கட்சிகளும் எவ்வித பேதமும் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், ரணில் விக்கிரமசிங்கவே எதிர்வரும் 2030 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாகவே பதவி வகிப்பார். அதில் எந்த மாற்று கருத்தும் கிடையாது. ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகிச் சென்று உருவாக்கப்பட்ட எந்தவொரு அரசியல் கட்சியும் இதுவரையில் வெற்றி பெற்றதில்லை. அதே போன்று எந்தவொரு அரசியல் தலைவரும் வெற்றியடைந்ததில்லை. ஐக்கிய மக்கள் சக்தி தொடர்பில் பேசுவது பிரயோசனமற்றது. ஏனைய கட்சிகளுக்கும் அதே நிலைமையே ஏற்படும்.

## நாட்டின் எதிர்காலத்திற்காக அனைவரையும் ஒன்றிணைப்பதே நோக்கம்



நாட்டின் எதிர்காலத்திற்காக அனைவரையும்

ஒன்றிணைப்பதே தனது நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். உலகில் ஏனைய நாடுகள் சாதனைகளுடன் நாளுக்கு நாள் முன்னோக்கிச் செல்லும் போது, நாம் ஒன்றிணையாத காரணத்தினால் பின்னோக்கி செல்வதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். அந்த வரலாற்று தவறை சரிசெய்து அனைவரையும் ஒன்றிணைத்து நாட்டை கட்டியெழுப்புவதே தமது நோக்கமாகும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று சனிக்கிழமை அனுராதபுரத்திற்கு விஜயம் செய்து மத வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## வருவாய் திறனுக்கு ஏற்ப நீர்க்கட்டணம்

அதிகரிக்கப்படுகின்ற நீர் கட்டணத்தை , வருவாய் திறனுக்கு ஏற்பட அறவிடுவதற்கு புதிய திட்டத்தை தயாரிப்பதில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. அண்மையில் நீர் கட்டணம் அதிகரிப்பு தொடர்பாக யோசனையை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அமைச்சரைவையில் முன்வைத்தார். அந்த யோசனைக்கு தற்போது அனுமதி கிடைக்கப்பபெற்றுள்ளதுடன் அதனை விரைவாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அதிக வருமானம் பெறும் தரப்பினருக்கும் குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கும் ஒரு அலகு நீருக்கு ஒரே அளவான கட்டணத்தை செலுத்துகின்றனர். அந்த முறைமைக்கு பதிலாக, குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு சலுகைகள் வழங்கவும், அதிக நீரை பயன்படுத்தும் அதிக வருமானம் பெறுபவர்களுக்கு வேறு முறையில் கட்டணத்தை அறவிடவும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தீர்மானித்துள்ளது. இதற்கமைய வீட்டு ப்பாவனைக்கான நீர்வசதியை மாத்திரம் பெறுபவர்களின் புதிய நீர்கட்டணங்களின் படி, குறைந்தளவிலேயே கட்டணம் அதிகரிக்கரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## எரிபொருள் பெற்றுக் கொள்ள இந்தியாவிற்கு சென்ற 208 விமானங்கள்

கடந்த 03 மாதங்களில் இலங்கையில் இருந்து 208 விமானங்கள் இந்தியாவில் உள்ள திருவனந்தபுரம் விமான நிலையத்திற்கு விமான எரிபொருளைப் பெற சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை எரிபொருளைப் பெறுவதற்காக 04 விமானங்கள் குறித்த விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதன்படி கடந்த மே மாதம் 27 ஆம் திகதி முதல் தொடரும் விமான எரிபொருள் நெருக்கடி காரணமாக திருவனந்தபுரம் விமான நிலையத்தில் இருந்து ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானங்கள் உட்பட 208 விமானங்கள் எரிபொருளை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இவ்வாரம் ரஞ்சன் விடுதலை



நீதித்துறையிடம் பகிரங்கமாக மன்னிப்புக்கோரும் ஆவணத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கையெழுத்திட்டப் பின்னர், ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் இவ்வாரம் ரஞ்சன் விடுதலை செய்யப்படுவார் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

## ஓய்வு பெறப் போவதில்லை



அரசியலில் இருந்து தற்போதைக்கு ஓய்வு பெறப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நான் அரசியலில் இருப்பேன். உரிய நேரத்தில் தான் ஓய்வு பெறுவேன். அதுவரை நான் போகமாட்டேன்" என முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## நியாயமாக போராட்டம் நடத்துபவர்களுக்கு பயங்கரவாதிகள் என்ற முத்திரை

### எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ

நியாயமாக போராட்டம் நடத்துபவர்கள் அனைவரையும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்த அரசு முயற்சிக்கிறது. ஜனநாயக நாட்டில் பேச்சு, ஒன்றுகூடல் மற்றும் போராட்டம் நடத்துவதற்கான சுதந்திரம் உள்ளதாகவும், ஆனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் இலங்கையில் அந்த சுதந்திரம் முற்றாக நீக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வசந்த முதலிகே உள்ளிட்டோர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப்

02

## நீர் கட்டணத்தை செலுத்த தவறிய அரசியல்வாதிகள்

நீர் கட்டணத்தை செலுத்த தவறிய பல்வேறு பதவி நிலைகளில் உள்ள 60 அரசியல்வாதிகளின் நீர் விநியோகத்தை துண்டிப்பதற்கு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தீர்மானித்துள்ளது. குறித்த அரசியல்வாதிகள் செலுத்த தவறிய குடிநீர் கட்டணங்களின் மொத்த மதிப்பு ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமாகும். அமைச்சர்கள், எம்.பி.க்கள், முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்டோரும் குறித்த பட்டியலில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தத் தவறிய ஓய்வுபெற்ற அமைச்சர்களின் ஓய்வூதியத்தில் இருந்து நிலுவைத் தொகையை மீட்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருவதாக சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார் . இது தொடர்பில் அரச நிர்வாக அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரசியல் கைதிகள் விடுதலையில் குட்டையைக் குழப்பும் கூட்டமைப்பு

அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக ஆரம்பம் முதலே விக்னேஸ்வரன் ஒரே நிலைப்பாட்டில் இருந்து வருகின்றார். அவர் ரணிலை ஆதரித்தபோதும் அதன் பின்னரான ரணிலுடனான சந்திப்புக்களின்போதும் "முதல்கட்ட நல்லிணக்கமாக அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டுமென்றே வலியுறுத்தியதாக தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். யாழ் மாவட்டத்தில் நடாத்திய ஊடகவியாளர்கள் சந்திப்பில் இதனை தெரிவித்தார். ஆனால் இடையில் இந்தப் பிரச்சனையில் தலையிட்ட கூட்டமைப்பினர் "அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிக்காவிட்டாலும் அவர்களில் ஒரு தொகுதியினரை முதல்கட்டமாக விடுவிக்குமாறு" கோரியிருந்தனர். தற்போது உள்ள அரசியல் கைதிகளைப் பொறுத்தவரை 47 பேர் வரை சிறைச்சாலைகளில் உள்ளனர். அவர்களில் அதிகமாக 27 வருடங்கள் தொடங்கி 13 வருடங்களுக்கு இடைப்பட்டவர்களாக இருந்து வருகின்றனர். தற்போது அரசாங்கம் வழமைபோன்று தனது ஏமாற்று வேலையை ஆரம்பித்துள்ளது. கடந்த வருடம் ஐ.நா கூட்டத்தொடருக்கு முன்பாக சுமார் 25 பேர் வரையான அரசியல் கைதிகள் அவசர அவசரமாக பிணை வழங்கி விடுவிக்கப் பட்டிருந்தனர். அதே பிணை வழங்கிய கைதிகளையே இந்த வருடம் ஐ.நா கூட்டத்தொடருக்கு முன்பாக விடுதலை செய்வதற்கான முயற்சியில் அரசாங்கம் முனைப்புக் காட்டி வருகின்றது. தற்போது அரசாங்கம் விடுவிப்பதற்காக முயற்சித்து வரும் கைதிகள் யாருமே விடுவிக்கப்பட கூடாதவர்கள் என்பதல்ல. அவர்களும் விடுதலை செய்யப்பட வேண்டியவர்களே அதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் தற்போது விடுவிக்கப்பட



உள்ளவர்கள் யாருமே கைது செய்யப்பட்டிருக்க வேண்டியவர்களே அல்லர். எல்லோருமே இருபது இருபத்தி இரண்டு பராயத்தை உடையவர்கள். இறுதி யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் ஆறு ஏழு வயது சிறுவர்களாக இருந்தவர்கள். யுத்தம் முடிந்த பின்னர் 'மாவீரர் நாளுக்கு விளக்கேற்றினார்கள், தலைவரின் புகைப்படத்தை முகப்புத்தகத்தில் பகிந்தார்கள்' போன்ற காரணங்களுக்காக புலிகளை மீள் உருவாக்கம் செய்ய முயற்சித்தார்கள் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார்கள். தற்போது பிணையில் உள்ள இவர்களையே ஐ.நா கூட்டத்தொடருக்கு முன்பாக விடுவித்துவிட்டு ஐ.நா வையும், தமிழ் மக்களையும் அரசாங்கம் ஏமாற்ற விழைகின்றது. இதற்கு கூட்டமைப்பும் ஒத்து ஓதுகின்றது என்பதுதான் வேதனை என தெரிவித்துள்ளார்.

## கோழி இறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலை



கோழி இறைச்சிக்கான கட்டுப்பாட்டு விலையை விதிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதுடன், இது தொடர்பான இறுதித் தீர்மானம் இந்தவாரத்தில்எட்டப்படும்எனவணிக, வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், கோழிப் பண்ணையாளர்கள் விலையைக் குறைக்க ஒப்புக்கொண்டால், கட்டுப்பாட்டு விலை அவசியமில்லை என்று அவர் கூறினார். இதேவேளை, நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் முட்டைக்கான ஆகக்கூடிய சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நியாயமாக போராட்டம் நடத்துபவர்களுக்கு

பயன்படுத்தி, தடுப்புக் காவல் உத்தரவின் பிரகாரம் அடைத்து வைத்துள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இது அரச மிலேச்சத்தனம் என்றும் அவர் குறிப்பிட்டார். அரச மிலேச்சத்தனம், அரச பயங்கரவாதம் மற்றும் அரச வன்முறைகளை முற்றாக கண்டிப்பதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்நாட்டில் உள்ள எந்தவொரு மக்களின் உரிமைகளுக்காகவும் அவர்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகவும் தான் முழுமையாக அர்ப்பனிப்புடன் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார். இந்நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் ஒன்றிணைந்து விரட்டியடித்த ராஜபக்சவினரை மீண்டும் களத்திற்கு கொண்டுவருவதற்கு மொட்டு கட்சியினர் செயற்பட்டு வருவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,இந்த நடவடிக்கைகளுக்கு அதிகாரத்தை கைப்பற்றும் நிகழ்ச்சி நிரலை அடிப்படையாக கொண்டு

# எட்டு பள்ளிவாசல்களுக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனை, பிறைந்துறைச்சேனை பகுதிகளிலுள்ள எட்டு பள்ளிவாசல்களுக்கு புதிய நிர்வாகிகளை தெரிவு செய்யும் நிகழ்வு வியாழக்கிழமை (18) இடம்பெற்றது. வாழைச்சேனை முகைதீன் ஜ/ம்ஆ பள்ளிவாசலின் நிர்வாக கட்டமைப்பின் கீழுள்ள வாழைச்சேனை ஹைறாத், பலாஹ், அக்பர், சாலிஹாத் மற்றும் பிறைந்துறைச்சேனை பதுரியா, முகைதீன் தைக்கா, பரகத் ஆகிய எட்டு பள்ளிவாசல்களிலே இத் தெரிவு இடம்பெற்றது.

வாழைச்சேனை முகைதீன் ஜ/ம்ஆப் பள்ளிவாசலில் ஏழு உறுப்பினர்களும் ஹைறாத் பள்ளிவாசலில் ஏழு உறுப்பினர்கள்களும் ஏனைய ஒவ்வொரு பள்ளிவாசல்களிலும் தலா ஐந்து உறுப்பினர்கள் அடங்களாக எட்டு பள்ளிவாசல்களிலும் மொத்தமாக 44 உறுப்பினர்கள் சபையோர் முன்னிலையில் தெரிவு செய்யப்பட்டனர். முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலக உத்தியோகத்தர் முன்னிலையில் இடம்பெற்ற இத் தெரிவில் வைத்தியர்கள், சட்டத்தரணிகள், கல்விமான்கள் என முக்கியஸ்தர்கள் பலரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# இந்தியாவின் மூன்றாம் கட்ட நிவாரண உதவி





**ஹஸ்பர்**

இந்தியா தமிழ்நாட்டின் ஊடாக வழங்கப்பட்ட மனிதாபிமான உலர் உணவுப் பொதிகள் இன்று (21) காலை 10.00 மணி அளவில் கிண்ணியா பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளரினால் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன. கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 31 கிராம சேவையாளர் பிரிவுக்குமாக 10 கிலோ அடங்கிய 500 பொதிகளுள் –சுமார் 2500 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் இதேவேளை 750குடும்பங்களுக்கான பால்மா பக்கெட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.இன்று பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனியிடம் வழங்கி வைக்கப்பட்டன. கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 31 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ளன. இவற்றுள் இன்று இரண்டு கிராம சேவையாளர்கள் பிரிவுகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன. பைசல் நகர் கிராம சேவகர் பிரிவில் உள்ள 220 குடும்பங்களுக்கும், அண்ணல் நகர் கிராம சேவர் பிரிவில் உள்ள 180 குடும்பங்களுக்கும் நிவாரணப் பொருட்கள் இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டன. இவ் நிவாரண பொருட்கள் வழங்கும் வைபவத்தில் கிண்ணியா பிரதேச செயலாளர் ,பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் முதலானவர்கள் கலந்து கொண்டனர்.





உலக படப்பிடிப்பாளர் தினத்தை முன்னிட்டு ஹட்டன் பீ வன் படப்பிடிப்பாளர் சங்கத்தினரால் பத்தனை டெரிக்கிளையார் பாடசாலைக்கு பெயர் பலகை ஒன்றை ஸ்தாபிப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. உலக படப்பிடிப்பாளர் தினத்தை அப்பாடசாலை மாணவர்களுடன் கேக் வெட்டி கொண்டாடினர். **(தலவாக்கலை பி.கேதீஸ்)**

# வதிவிட செயலமர்வு



திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்கள், மாவட்ட மகளிர் அபிவிருத்தி மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோர்களுக்கு இரு நாள் வதிவிடச் செயலமர்வு ஒன்று நேற்றும் (20) இன்றும்(21) திருகோணமலை சர்வோதய நிலையத்தில் நடைபெற்றது. ஐக்கிய நாடுகள் சபையின் பொறிமுறை (ருவைநன யேவழைளெ ஞ஡லளவநஅ) என்ற தொனிப் பொருளில் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் அனுசரணையின் கீழ் இந்தச் செயலமர்வு இடம்பெற்றது. இதன் ஐக்கிய நாடுகளின் தோற்றம்,வளர்சிப் போக்கு,ஏற்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் இதர செற்பாடுகள் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டது. இதில் வளவாள ருக்கீ பெர்னாண்டோ கலந்து கலந்து

# அங்கஜனின் கோரிக்கையை விரைவில் நடைமுறைப்படுத்துவோம் அமைச்சர் பந்துல உறுதி



**த.சுபேசன்**

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு அத்தியவசியப் பொருட்களை எடுத்துவர புகையிரதங்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என்ற பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் கோரிக்கையை நடைமுறைப்படுத்தவிருப்பதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரியப்படுத்தியுள்ளார்.போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன யாழ் மாவட்டத்திற்கு இருநாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த போதே பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜனிடம் அவர் இதனைத் தெரியப்படுத்தியிருந்தார்.

அதன் முன்னாயத்த செயற்பாடாக புகையிரத திணைக்களம் அதற்கான திட்ட முன்மொழிவுகளை முன்னெடுத்து வருவதாகவும் மேலும் அவர் தெரிவித்திருந்தார். தற்போது நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு தேவையான மருந்து உள்ளிட்ட அத்தியவசிய பொருட்களை எடுத்துவர புகையிரதங்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என யாழ் வர்த்தகர்கள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜனிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அங்கஜன் இராமநாதன் இவ் விடயத்தை அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய
வருடாந்த மகோற்சவம் - 2022



கல் நந்தி புல்லுண்டு
வெள்ளையரை துரத்தியடித்த
தான்தோன்றீஸ்வரர் மகிமை காண வாரீர்!
கொடியேற்றம் : 29.08.2022
தேரோட்டம் : 11.09.2022
விளம்பர அனுசரணையாளர் மு.அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# பன்மைத்துவப் பயிற்சிப் பட்டறை



உள்ளுராட்சி மன்றங்களில் உறுப்பினராகவுள்ள பெண் உறுப்பினர்கள் மற்றும் சமூகங்களிலுள்ள பெண் தலைவர்களுக்குமான பன்மைத்துவம் மற்றும் ஒன்றிணைத்தல் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி மட்டக்களப்பில் தொடராக இடம்பெற்று வருவதாக தேசிய சமாதானப் பேரவையின் மாவட்ட சர்வமத செயற்குழு இணைப்பாளர் ஆர். மனோகரன் தெரிவித்தார். இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு கல்லடியிலுள்ள தனியார் விடுதியில் சனிக்கிழமை 20.08.2022 இந்த விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

மாவட்ட இணைப்பாளர் ஆர். மனோகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபை உள்பட உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த பெண் பிரதி நிதிகளும் சமூக பெண் தலைமைத்துவங்களுமாக சுமார் 40 பேர் கலந்து கொண்டனர். வளவாளராக பேராதனைப் பல்கலைக் கழக அரசறிவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர். ரமேஷ் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார்.

வீட்டில், சமூகத்தில், அரசியலில், நாட்டில் பன்மைத்துவம் மிளிர வேண்டுமானால் இன மத மொழி அரசியல் பாகுபாடு இல்லாத மனப்பாங்கு ஏற்பட வேண்டும், மனிதம் பேணப்பட வேண்டும். கடந்த உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் 25 வீதமாக கோட்டா முறை பெண் பிரதிநிதித்துவம் உள்வாங்கப்பட்டதினால் இலங்கையில் 340 உள்ளுராட்சி மன்றங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 8000 பேரில் சுமார் 1900 பேர் பெண்களாக பிரதிநித்துவம் பெற முடிந்தது.

92 வீதம் எழுத்தறிவு கொண்ட இலங்கையின் சனத்தொகையில் சுமார் 53 வீதம் பேர் பெண்களாக உள்ளனர். பெண்களுக்கு அரசியலில் சமத்துவம் இல்லாத நிலைமை காணப்படுகிறது. நெருக்கடியை முகாமைத்துவம் செய்யும் ஆற்றல் பெண்களிம் உள்ளதால் எழுச்சிப் போராட்டங்கள் ஊடாக இலஞ்சத்தையும் ஊழலையும் ஒழிக்க முற்போக்கு சிந்தனையுள்ள பெண் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு மக்களுக்கு சேவையாற்ற முன்வரவேண்டும் என அவர் வலியுறுத்தினார். இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட பெண்கள், உள்ளுராட்சி மட்டத்தில் பன்மைத்துவத்தைப் பாதிக்கும் காரணிகள், பன்மைத்துவத்தைக் கட்டியெழுப்புவதில் பெண்களின் வகிபாகம் என்பன பற்றி அறிக்கைகள் பெறப்பட்டு தெளிவூட்டல் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தேசிய சமாதானப் பேரவையின் திட்ட முகாமையாளர் என். பாசுதேவன், சர்வமத பேரவையின் மாவட்ட உதவி இணைப்பாளர் எச்.ஏ.எம். ஹமீட் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# போதை பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு

( வாஸ் கூஞ்ஞ)



இக் கிராமத்தின் மாணவர்களின் நலன் கருதியும் இவ்வூர் சமூகத்தினதும் நலன் கருதி இந்த கிராமதில் போதை பொருட்களுக்கு அடிமைகளாக இருப்போர் இனியாவது தங்கள் நடவடிக்கையிலிருந்து விலகிச் செல்வீர்கள் என எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றோம் என மன்னார் மூர் விதி பெரிய பள்ளிவாசல் மௌலவியும் பிரஜைகள் குழு ஆளுநர் சபை உறுப்பினருமான மௌலவி எஸ்.ஏ.அசீம் அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை (19.08.2022) மன்னார் புதுக்குடியிருப்பு கிராமத்தில் அப்பகுதி சமூகத்தினால் போதை பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு கவனயீர்ப்பு போராட்டத்தின்போது மன்னார் மூர் விதி பெரிய பள்ளிவாசல் மௌலவியும் பிரஜைகள் குழு ஆளுநர் சபை உறுப்பினருமான மௌலவி எஸ்.ஏ.அசீம் தெரிவிக்கையில், நாட்டினதும் இந்த கிராமத்தினதும் விஷேடமாக உங்களினதும் உங்கள் குடும்பத்தினதும் நலன் கருதி போதை வஸ்துப் பாவனையிலுள்ளவர்கள் உடன் அதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் மிகவும் பணிவாக இதன் பாவனையாளர்களிடம் வேண்டி நிற்கின்றோம்.

இந்த தேச விரோதச் செயல் சமூக விரோதச் செயல் மாணவர்களின் கல்வியை அழிக்கின்ற இந்த செயலை கைவிடும்படி நாம் வேண்டிக் கொள்ளுகின்றோம். இதிலிருந்து இந்த போதை வஸ்து பாவனையிலிருந்து விடுபடாவிடில் எங்கள் நடவடிக்கைகள் தொடர்ந்து கிராம அபிவிருத்தி சங்கங்கள் மாவணவர்கள் சமூக நலன் விரும்பிகள் இவ் ஊர் மக்கள் யாவரும் ஒன்றினைந்து இவற்றை தடை செய்வதற்கான தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்பதை இங்கு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இந்த போதை வஸ்துகளுக்கு அடிமைகளாக இருக்கும் நீங்கள் இவ் கிராமத்தில் மோசமான செயல்பாட்டிலிருந்து இனியாவது தவிர்த்து வாழ்வீர்கள் என நாங்கள் நம்பி இருக்கின்றோம். இவ் போதை பொருட்கள் விற்பனை செய்வோரை மற்றும் இதற்கு அடிமைகளாக இருப்போரை சட்ட ரீதியில் தடை செய்வீர்கள் என பொலிசார் மற்றும் சட்டத்தை அமுல் படுத்துகின்றவர்கள் செய்வீர்கள் என எதிர்பார்த்து நிற்கின்றோம்.என இவ்வாறு தெரிவித்தார்.

# தொழில் வழிகாட்டல் செயலமர்வு

தலவாக்கலை பி.கேதீஸ்

ரோட்டரி கொழும்பு மிட்சிட்டி மற்றும் ரோட்டரக்கட் பீஸ் சிட்டி ஹட்டன் கழகங்களின் அனுசரணையில் நேற்று முன் தினம் தலவாக்கலை தேசிய பாடசாலையில் உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் செயலமர்வு ஒன்று நடைப்பெற்றது. இந்நிகழ்வில் ரோட்டரி கழகத்தின் மாவட்ட பொதுச் செயலாளர் குமார் சுந்தரராஜ், ரோட்டரி கொழும்பு மிட்சிட்டியின் தலைவர் சலீக்க, ரோட்டரக்கட் பீஸ் சிட்டி ஹட்டன் கழகத்தின் தலைவர் வினோஷா கயாலினி, நுவரெலியா வலயக்கல்வி உதவி பணிப்பாளர் சாந்தகுமார், பாடசாலையில் அதிபர் கிருஸ்ணசாமி மற்றும் ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவர்கள், மூத்த அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரின் உருவச்சிலை திறப்பு நிகழ்வு

(அ . அச்சுதன்)

திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் அருணாசலம் தங்கத்துரை அவர்களது 25வது நினைவுதினத்தை முன்னிட்டு அன்னாரது திருவுருவச்சிலை திறப்பு விழாவும், நினைவு மலர் வெளியீடும் 28.08.2022 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் மூதூ ர் – கிளிவெட்டி மாகாவித்தியாலய தங்கத்துரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள் உட்பட பொதுமக்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# விவசாயிகளுக்காக அறுவடைக்கான டீசல் விநியோகம்



ஹஸ்பர்

திருகோணமலை மாவட்டம்,தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதிகளில் தற்போது விவசாய நெல் அறுவடை இடம் பெற்று வரும் நிலையில் டீசல் விநியோகமும் சீராக இடம் பெறுகின்றன. குறித்த டீசல் விநியோகமானது முள்ளிப்பொத்தானை எரி பொருள் நிரப்பு நிலையம் ஊடாக நேற்று(20) இடம் பெற்றது. கமநல அபிவிருத்தி நிலையம் ஊடாக ஒரு ஏக்கர் நிலப்பரப்பு தலா 10 லீற்றர் என்றவாறு சீரான விநியோகம் இடம் பெற்றது. தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை கமநல சேவை அபிவிருத்தி நிலையங்கள் ஊடான முறையான விண்ணப்பங்கள் பெறப்பட்டு இவ் விநியோகம் இடம் பெற்றது. இதனால் அறுவடை நேரங்களில் எவ் வித தடையின்றி இயந்திரம் ஊடாக நெல் அறுவடையினை பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வந்த நிலையில் தற்போது சிரமமின்றி எரிபொருள் விநியோகம் விவசாயிகளுக்கும் கேன்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

# பாடசாலைகளுக்கு இடையில் கிரிக்கெட் சமர்



ரவ்பீக் பாயிஸ்

திருகோணமலையில் பிரபல முன்னணிப் பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் சமர் மீண்டும் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. குறித்த போட்டியின் ஆரம்பநிகழ்வு இன்று (21) திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் சி.சிறிதரன் அவர்களின் தலைமையில் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

50 ஓவர்களைக் கொண்ட இச்சுற்றுப்போட்டியானது தீருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பழைய மானவனும், கோணேஸ்வரா இந்துக்கல்லூரி கிரிக்கெட் குழுவின் முன்னைநாள் தலைவருமான மறைந்த பிரபாகரன் திலக்ஷன் அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது நண்பர்களினால் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகிறது.

இச்சுற்றுப் போட்டியின் முதல்போட்டியான இன்று (21) நாணயசுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பாட களமிறங்கும் தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியை எதிர்த்து உவர்மலை விவேகானந்தா கல்லூரி அணியினர் களத்தடுப்பில் ஈடுபட தற்போது போட்டி ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஏனைய போட்டிகளாக எதிர்வரும் வியாழக்கிழமை திருகோணமலையின் பிரபல பாடசாலைகலான திருகோணமலை விபுலானந்தா கல்லூரி மற்றும் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி ஆகியன போட்டியிடவுள்ளதுடன் இப் போட்டியின் இறுதி சுற்று போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு கௌரவிப்பு நிகழ்வு





நூருல் /ஹுதா உமர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.ஆர்.எம் தௌபீக் அவர்களுக்கு சனிக்கிழமை சேவைப்பாராட்டு நிகழ்வும் பிரியாவிடை நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதி பணிப்பாளர், பிரிவுத்தலைவர்கள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களுடன் வைத்திய அத்தியட்சகர்களும் பிரதேச வைத்திய அதிகாரிகளும் சுகாதார வைத்திய அதிகாரிகளும் கலந்து கொண்டு தமது பாராட்டுக்களை பதிவு செய்து நினைவுச் சின்னங்களையும் வழங்கி வைத்தனர்.

நேர்மையான பணி செய்து கொரோனா ஒழிப்புக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டமைக்காக பணிமனையினாலும் வைத்தியசாலைகளினாலும் பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.ஆர். எம் தௌபீக் அவர்கள் தேசிய கண் சிகிச்சை வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்று செல்லவுள்ள நிலையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது





பொன்ஆனந்தம்

திருகோணமலை சாம்பல்தீவு 6ம் கட்டை யில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு லக்ஷ்மி நாராயணர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் கொடியேற்றநிகழ்வு இன்று காலை 9.00மணி யளவில் நடைபெற்றது. இன்று ஆரம்பமாகும் பிரமோற்சவம் தொடர்ந்து 10நாட்கள் நடைபெறவுள்ளது. இலங்கையின் மிகப்பெரிய நாராயணர் ஆலயமன இவ்வாலயம் சுற்றுலா ப்பிரதேசமான நிலாவெளி நெடுஞ்சாலை யில் அமைந்துள்ள து. இந்நிகழ்வின்போது கொடியேற்றப்படுவதுடன், ஆலய நுழைவாயிலில் சுவாமி எழுந்தருளி இருப்பதையும் படங்களில் காணலாம்

# கல்யாண சுப்ரமணியருக்கும் மகாகும்பாபிஷேகம்

எஸ். சதீஸ்

மட்டக்களப்பு நகரின் மேற்கே வவுணதீவு பிரதேசத்தின் நெடியமடு கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக அமையப்பெற்ற பரிபால மூர்த்திகளான ஸ்ரீ ஆஞ்சநேயர் சுவாமிக்கும் ஸ்ரீ கல்யாண சுப்ரமணியருக்கும் ஆவர்த்தன மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் ஞாயிற்றுக்கிழமை (21) மிக சிறப்பாக இடம் பெற்றது. எம்கடமை அமைப்பின் தலைவர் பரமேஸ் கவி பரமேஸ்வரனால் தர்மலிங்கம் சுபாஸ்கரன் ராஜ/ (சுவிஸ்) குடும்பத்திரிடமும் குணரெத்தினம் தயாழினி (சுவிஸ்) ஆகியோரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க இவ் இரு ஆலயங்களும் நிர்மானிக்கப்பட்டது. சிவாச்சாரியார் சிவஸ்ரீ சபாபதி சிவாதான் குருக்கள் தலைமையில் யாகம் பூசைகள், கிரியைகள் நடைபெற்று வினாயகர் பூசையினைத் தொடர்ந்து ஆலய மகா கும்பாபிஷேகம் நடை பெற்றது.

# மக்களின் செயற்பாடுகளை முன்னெடுக்கச் சரியான களம் அமையவில்லை

**பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன்**





**(சுமன்)**

பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைத்திருந்தாலும் எமது மக்களுக்கான சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குரிய சரியான களம், சந்தர்ப்பம் அமையவில்லை. இருந்தும், கிடைக்கின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் எமது மக்களின் பிரச்சனைகளை முன்நிறுத்திச் செயற்பட்டு வருகின்றேன் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்துள்ளார். கல்முனை சைனிங் விளையாட்டுக் கழக கிரிக்கட் சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பிரதேசங்களிலே பல குறைபாடுகள் காணப்படுகின்றன. விளையாட்டினைப் பொருத்தவரையில் மைதானங்கள் இல்லாத நிலைக்கு மேலாக இருக்கின்ற மைதானங்களும் பல குறைபாடுகளோடு இருக்கின்றன. இவ்வாறான விடயங்கள் தொடர்பில் தற்போது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார, அரசியல் சிக்கல் நிலைமைகளின் காரணமாக எம்மால் குறிப்பிட்டு வாக்குறுதிகளை வழங்க முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கின்றோம்.

ஏனெனில் இந்த நாட்டிலே பெரும் நோய்த்தொற்று உருவாகி மக்களுக்கு சொல்லொனாத் துயரத்தைத் தந்தது. அது மட்டுமல்லாது ராஜபக்ச குடும்பத்தின் முறையற்ற ஆட்சியினால் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக நாட்டின் சகல இன மக்களும் வாழ்விழந்த நிலையில் பெரும்பான்மைச் சிங்கள மக்களாலேயே கொண்டுவரப்பட்ட கோட்டாபாய ராஜபக்ச அந்த மக்களாலேயே விரட்டியடிக்கப்பட்டு ஏதோவொரு விதத்தில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கமொன்று உருவாகியிருக்கின்றது. இன்று தற்போதைய இந்த அரசாங்கமும் நீடித்திருக்குமா என்ற கேள்வி அனைவர் மத்தியிலும் இருக்கும் போது எம்மால் வேலைத்திட்டங்கள் தொடர்பான வாக்குறுதிகளை வழங்க முடியாது. இருந்தும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் எனக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் எமது பிரதேச ரீதியான திட்டங்களுக்கு சிறு சிறு தொகையினை ஒதுக்கீடு செய்திருக்கின்றேன்.

உண்மையில் எனக்கு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைத்திருந்தாலும் எமது மக்களுக்கான சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குரிய சரியான சந்தர்ப்பம், களம் அமையவில்லை. இருந்தும், கிடைக்கின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் எமது மக்களின் பிரச்சனைகளை முன்நிறுத்தி அவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலே எமது பணிகளை மேற்கொண்டு வருகின்றேன் என்று தெரிவித்தார்.

# சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகையின் 125 வது ஆண்டு விழா



**(காரைதீவு நிருபர் சகா)**

உலகளாவிய ராமகிருஷ்ண மிஷனை ஸ்தாபித்த வீரத்துறவி, வங்கத்தின் சிங்கம் சுவாமி விவேகானந்தரின் ஈழத்திருநாட்டுக்கான வருகையின் 125 வது ஆண்டு நிறைவு விழா, கல்லடி விவேகானந்த மகளிர் கல்லூரியில் கோலாகலமாக நடைபெற்றது. கல்லூரி அதிபர் திருமதி நவகீதா தர்மசீலன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வின் ஆரம்பத்தில், கல்லடி ராமகிருஷ்ண ஆக்கிரமத்திலுள்ள ராமகிருஷ்ண திருக்கோயிலில் விசேட பூஜை வழிபாடு நடைபெற்றது.

அதனை தொடர்ந்து அங்கிருந்து சுவாமி விவேகானந்தரின் திரு உருவப்படம் தாங்கிய அலங்கார ஊர்தி ஊர்வலமாக பாடசாலைக்கு கொண்டுவரப்பட்டது. பாடசாலையில் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியது .

அங்கு ராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு மாநில பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ் சிறப்பு சொற்பொழிவையும்,உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் விசேட உரையினையும் நிகழ்த்தி இருந்தார்கள். மாணவர்களின் பேச்சும் கலை நிகழ்ச்சிகளும் இடையிடையே நடைபெற்றன. சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகையின் போதான காட்சிகள் காணொளியில் காண்பிக்கப்பட்டது.




# நகைக்கடை வியாபாரிகள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்



நகைக்கடை வியாபாரிகள் தற்போது முகம் கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் விழிப்பூட்டல் கலந்துரையாடல் ஒன்று கல்முனை தலைமையக கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை(20) மாலை இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் கலந்து கொண்டு இதன் போது நாட்டில் தற்போது நிலவி வருகின்ற பொருளாதார நெருக்கடிகள் நகை கடை உரிமையாளர்கள் நகை அடகு பிடிப்பாளர்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகள் நகைக்கடைகளில் பணியாற்றும் பணியாளர்களின் விபரங்கள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

நகை கடை உரிமையாளர்கள் நகை அடகு பிடிப்பாளர்கள் இக்கலந்துரையாடலில் பங்கு பற்றி தத்தமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டதுடன் தமது நலனில் அக்கறை எடுத்து செயற்படவுள்ள கல்முனை தலைமையக பொலிஸாருக்கு நன்றிகளையும் தெரிவித்து கொண்டனர். மேலும் நகைக்கடை வியாபாரிகள் அடகுபிடிப்பாளர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை உடனடியாக தீர்ப்பதற்கு 0718591161 அல்லது 0672229226 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தருமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலானது கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட் நெறிப்படுத்தியதுடன் சித்திக் கல்முனை வர்த்தக சங்க தலைவர் கே.எம்.எம். சித்தீக் உட்பட நகை கடை உரிமையாளர்கள் நகை அடகு பிடிப்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# ஊடகவியலாளர் காலமானார்

**ஏ.பி.எம்.அஸ்ஹர்**



இறக்காமத்தைச்சேர்ந்த பிரபல ஊடகவியலாளர் எஸ். எல். எம். பிக்கீர் தனது 59 ஆவது வயதில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார். கடந்த சில நாட்களாக சுகயீனமுற்று அம்பாரை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே இவர் காலமானார். அம்பாரை மாவட்டத்திலுள்ள மூத்த ஊடகவியலாளர்களுள் ஒருவரான இவர் சுமார் 30 வருடங்களுக்கும் மேலாக அச்சு மற்றும் இலத்திரணியல் ஊடகங்களில் பிராந்திய நிருபராகச்சேவையாற்றியுள்ளார்.

தொழில் ரீதியில் ஓர் ஆசிரியரான இவர் மரணிக்கும் போது இறக்காமம் அல் மதீனா வித்தியாலயத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றி வந்தார்.ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் செயற்குழு உறுப்பினராகவும் சப்மா ஸ்ரீ லங்காவின் உறுப்பினராகவும் செயற்பட்டு வந்த இவர் அம்பாரை மாவட்டத்திலுள்ள பல்வேறு ஊடக அமைப்புக்களுடனும் இணைந்து பணியாற்றியுள்ளார். அம்பாரை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றிய இவர் மரணிக்கும் போது அதன் பிரதித் தலைவராகவும் செயற்பட்டு வந்தார்.

சிங்கள மொழியில் ஆற்றல் கொண்ட இவர் சிங்கள மற்றும் தமிழ் அரசியல்வாதிகளுடனும் ஊடகவியலாளர்களுடன் மிகவும் நெருக்கமாக செயற்பட்டு வந்தார் இவர் இனக்கலவரங்களின் போது இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் மிகவும் தீவிரமாக செயற்பட்டு வந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவரது ஜனாஸா நேற்று இறக்காமத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது

# காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழா

**( காரைதீவு நிருபர் சகா)**

இந்துமா சமுத்திரத்தின் மத்தியில் முத்தெனத்திகழும் இலங்காபுரியின் கிழக்கு மாகாணத்தின் மட்டுமா நகரின் தென்பால் செந்நெல் விளையும் செழிப்பான வயல் நிலமும், வங்ககடலலையின் தாலாட்டில் திகழும் சைவப்பழம் பெரும் கிராமமாம் காரைதீவில் கோயில் கொண்டு அருளாட்சி செய்கின்ற வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ பாலையடி வாலவிக்கினேஸ்வர பெருமானின் வருடாந்த மஹோற்சவ பெருவிழாவானது நாளை ( 22) திங்கட்கிழமை பகல் 12.05 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இப் பெருவிழா தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா இடம்பெற்று செப்டம்பர் 01 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் இனிதே நிறைவு பெறும். ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறும்.

நேற்று (22) திங்கட்கிழமை காலை மாவடி கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து கொடிச்சீலை கொண்டு வரப்பட்டு 12.15 மணியளவில் கொடியேற்றம் நடைபெறும். எதிர்வரும் 31ஆம் தேதி கண்ணகி அம்பாள் ஆலயத்தில் இருந்து பாற்குடபவனி இடம் பெறும். கும்பாபிஷேகத்தின் பின் சுமுகமான நிலையில் இடம் பெறும் திருவிழா என்பதால் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்துள்ளதாக ஆலய பரிபாலன சபை செயலாளர் அ.குமரநாதன்( ஆசிரியர்) தெரிவித்தார். அண்மையில் இவ் ஆலயத் தலைவர் இ.தங்கராசா( ஓய்வு நிலை அதிபர்) இறைபதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் கௌரவிப்பு நிகழ்வுகள்



**த.சுபேசன்**

சாவகச்சேரி வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் தேசிய மட்ட சாதனையாளர் மற்றும் சமூக சேவகர் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் 19ஃ08 வெள்ளிக்கிழமை பிற்பகல் கைத்தொழில் வணிகர் மன்றத்தின் அமரர் ச.நமசிவாயம் நினைவு மண்டபத்தில் இடம்பெற்றிருந்தன. சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வே.சிவநிதன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் இலங்கை தேசிய மட்ட பளு தூக்கல் போட்டியில் 766கிலோகிராம் எடையினைத் தூக்கி தங்கப்பதக்கம் வென்ற ச.புஸாந்தன் கௌரவிக்கப்பட்டதுடன்–அவருக்கான பரிசுத்தொகையினையும் வர்த்தக சங்கம் வழங்கி வைத்திருந்தது.

அத்துடன் நிகழ்வில் நாட்டில் எரிபொருளுக்கான நெருக்கடி ஏற்பட்ட வேளையில் நோயாளர்கள்,வைத்தியர்கள்,வர்த்தகர்கள்,நோயாளர் காவு வண்டி ஆகியவற்றுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்கி சிரமங்களைத் தவிர்த்த நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் வை.சிவராசாவினையும் சாவகச்சேரி வர்த்தக சங்கத்தினர் பொன்னாடை போர்த்தி–மலர்மாலை அணிவித்துக் கௌரவித்திருந்தனர்.குறித்த நிகழ்வில் சாவகச்சேரி வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கால் புதையும் மண்ணில்

# சிற்கள் புதைந்து செல்லும்

# தேரோட்டம்

## 2022.09.11

## காண வாரீர்!

## கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்



"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

# மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம்







**( வாஸ் கூஞ்ஞ)**

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் மாணவர் செயற்பாட்டாளர்களை பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க வேண்டாம் எனக் கோரி மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம் பெற்றது. இவ் போராட்டமானது மன்னார் நகரில் ஞாயிற்றுக்கிழமை 21. 8 .2022 அன்று காலை 10:30 மணியளவில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு வின் ஏற்பாட்டில் மன்னர் மெசிடோ நிறுவனத்தின் ஆதரவில் இடம்பெற்றது. இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துகளாவது, இலங்கையின் வடக்கு கிழக்கைச் சார்ந்த மனித உரிமை பாதுகாவலர்கள் சிவில் அமைப்புகள் பெண்கள் அமைப்புகள் ஒன்றிணைந்து ஜனாதிபதி அவர்களுக்கு 18 ஆவணி 2022 அன்று கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மாணவ செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் செயல்பாட்டாளர்கள் சார்ந்த எமது பகிரங்க கோரிக்கையை முன்வைப்பதுடன்

ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் மற்றும் கருத்து தெரிவிப்பதற்கான சுதந்திரம் ஆகியன அரசியல் அமைப்பின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகள் ஆகும். இந்த உரிமைகளை பல்கலைக்கழக மாணவ செயற்பாட்டாளர்களும் சிவில் அமைப்புகளின் செயல்பாட்டாளர்களும் தமது கோரிக்கைகளை தமது நாட்டின் சக பிரதிகளுக்கும் அரசாங்கத்துக்கும் வெளிப்படுத்துவதற்காக பயன்படுத்தினர். அவர்கள் வன்முறையில் ஈடுபட்டுமைக்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை தொழிற்சங்க நடவடிக்கைகளும் வெகுஜன போராட்டங்களும் பயங்கரவாத நடவடிக்கைகள் அல்ல மாணவ செயற்பாட்டாளர்கள் பயங்கரவாதம் சம்பந்தப்பட்ட எவ்வித நடவடிக்கைகளும் ஈடுபடவில்லை.

எனவே பல்கலைக்கழக மாணவ செயற்பாட்டாளர்களை பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க வேண்டாம் என கோருகின்றோம். இலங்கையில் ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சர் ஆவார் அவ்வகையில் எவரையும் பயங்கரவாத தடைக்கட்டத்தின் கீழ் தடுப்பு காவலில் வைக்க கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. எனவே தங்களின் மேலான அதிகாரத்தை பயன்படுத்தி மாணவ செயற்பாட்டாளர்களை பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பதற்கான தடுப்பு காவல் கட்டளைப் பத்திரத்தில் கைச்சாத்திட வேண்டாம் எனக் கோருகின்றோம்

இலங்கையின் வடக்கு கிழக்கை சார்ந்த சிறுபான்மை தமிழர்களான நாம் தற்போதும் கொடூரமான பயங்கரவாத தடை சட்டத்தின் மனிதத் தன்மையற்ற துன்புறுத்தலை இன்று வரை அனுபவித்து வருவதோடு அச்சட்டத்தின் காட்டுமிராண்டித்தனமான சுபாவத்தினை நேரடியாக எதிர்கொண்ட அனுபவங்களும் எமக்கு உண்டு. இளம் வயதில் கைது செய்யப்பட்ட அப்பாவி தமிழ் இளைஞர்கள் 30 – 40 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை சிறையில் கழித்து வருகின்றனர் சிலர் வெளிச்சத்தை காணாது சிறைக்குள்ளேயே மாண்டு போயினர். இலங்கையில் சிறுபான்மை மக்களான எம்மை பொறுத்தவரையில் இந்நாட்டில் யாரும் இனிமேல் பயங்கரவாத தடைத்தட்டத்தின் கீழ் விசாரிக்கப்படக்கூடாது அத்துடன் அற வழி போராட்டக்காரர்கள் அனைவரையும் உடன் விடுவிக்குமாறு தங்களை கூறுகின்றோம் என இவ்வாறு தெரிவித்துள்ளனர்

# இளைஞர் கழகங்களுக்கான ஒரு நாள் செயலமர்வு

**எப்.முபாரக்**

தேசிய புலம்பெயர் சேவை மன்றம் மற்றும் புலம்பெயர்ந்தோர் அபிவிருத்தி சங்கம் இணைந்து இளைஞர் கழகங்களுக்கான ஒரு நாள் செயலமர்வு இன்று (21) திருகோணமலை குளக்கோட்டன் மாநாட்டு மண்டபத்தில் “எல்லை தாண்டிய குடியேற்ற விரிவாக்கம்” என்ற தலைப்பில் நடைபெற்றது. திருகோணமலை மாவட்டத்தின் 11 பிராந்திய செயலகப் பிரிவுகளை உள்ளடக்கிய இளைஞர் கழகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 30 சிங்கள, தமிழ், முஸ்லிம் இளைஞர்களுக்கு நடைபெற்றது. இப்பணியின் போது, திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் மன்றத்தின் தலைவர் அமதோர அமரஜீவவினால் “சமூக ஊடகங்களும் இளைஞர்களும்” என்ற தலைப்பில் விரிவுரை நடத்தப்பட்டது. இதில் தேசிய இடம்பெயர்வு சேவை மன்றத்தின் திருகோணமலை மாவட்ட உதவிப் பணிப்பாளர் திரு.எஸ்.ரவிகுமார், இடம்பெயர்வு அபிவிருத்தியின் சிரேஷ்ட இணைப்பாளர் திரு.பி.சச்சிவானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# விடுதலை செய்யக்கோரி போராட்டம்







**வடமலை ராஜ்குமார், சி.சசிகுமார்**

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாணவர் செயற்பாட்டளர்களை விடுதலை செய்யக் கோரி திருகோணமலை 3ம் கட்டை சந்தியில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை வடக்கு கிழக்கு மனித உரிமைப் பாதுகாவலர்கள் சிவில் சமூக அமைப்பக்கள் பெண்கள் அமைப்புக்கள் இணைந்து .ன்று 21ம் திகதி நடாத்தினர். அத்துடன் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றினையும் அனுப்பியுள்ளனர். அம் மகஜர் பின்வருமாறு, அனைத்துப் பல்கலைக ˙கழக மாணவா ˙ ஒன்றியத்தின் மாணவ செயற்பாட்டாளர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க வேண்டாம்.

இலங்கையின் வடக்கு கிழக்கைச் சாா ˙ந்த மனித உரிமைப் பாதுகாவலா˙ கள், சிவில் அமைப்புகள், பெண்கள் அமைப்புகள் ஒன்றிணைந்து, ஜனாதிபதியான தங்களிடம் 18 ஆவணி 2022 அன்று கைது செய் யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மாணவ செயற்பாட்டாளர் ˙கள் மற்றும் சிவில் அமைப்புகளின் செயற்பாட்டாளா ˙கள சார்ந்த எமது பகிரங்கக் கோரிக்கையை முன்வைக்கிறோம்.

ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் மற்றும் கருத்துத் தெரிவிப்பதற்கான சுதந்திரம் ஆகியன அரசியலமைப்பின ˙ மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளாகும். இந்த உரிமைகளை பல ˙கலைக்கழக மாணவ செயற்பாட்டாளா ˙களும ˙ சிவில் அமைப்புகளின் செயற்பாட்டாளர்களும் தமது கோரிக்கைகளை தமது நாட்டின் சக பிரஜைகளுக்கும் அரசாங்கத்துக்கும் வெளிப்படுத்துவதற்காக பயன்படுத்தினா். அவர்கள் வன்முறையில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. தொழிற்சங்க நடடிவடிக்கைகளும் வெகுஜனப் போராட்டங்களும ˙ பயங்கரவாத நடிவடிக்கைகள் அல்ல. மாணவ செயற்பாட்டாளர்கள் பயங்கரவாதம் சம்பந்தப்பட்ட எவ்வித நடவடிக் கைகளிலும் ஈடுபடவில்லை. எனவே, பல்கலைக ˙கழக மாணவ செயற்பாட்டாளா ˙களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ˙ தடுத்து வைக்க வேண ˙டாமெனக் கோருகிறோம். இலங்கையில ˙ ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச ˙சராவார். அவ்வகையில், எவரையும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்க கட்டளைப் பிறப்பிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. எனவே தங்களின் மேலான அதிகாரத்தைப் பயன்படுத்தி மாணவ செயற்பாட்டாளர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பதற்கான தடுப்புக்காவல் கட்டளைப் பத்திரத்தில் கைச்சாத்திட வேண்டாம˙ எனக் கோருகிறோம˙.

இலங்கையின் வடக்கு கிழக்கை சார்ந்த சிறுபான்மைத்தமிழர்களான நாம் தற்போதும் கொடூரமான பயகரவாதத் தடைச்சட்டத்தின் மனிதத் தன்மையற்ற துன்புறுத்தலை இன்றுவரை அனுபவித்து வருவதோடு, அச் சட்டத்தின் காட்டுமிராண்டித்தனமான சுபாவத்தினை நேரடியாக எதிா ˙கொண்ட அனுபவங்களும் எமக்கு உண்டு. பதின்ம வயதில் கைதுசெய்யப்பட்ட அப்பாவி தமிழ் இளைஞா˙கள் 30 40 வருடங்களுக ˙கு மேற்பட்ட காலத்தை சிறையில் கழித்து வருகின்றனா˙ . சிலா˙ வெளிச்சத்தைக் காணாது சிறைக் குள்ளேயே மாண்டுபோயினா˙ .

இலங்கையின் சிறுபான ˙மை மக்களான எம்மைப் பொறுத்தவரையில், இந ˙நாட்டில் யாரும் இனிமேல் பயங்கரவாதத் தடைச ˙சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படக் கூடாது. அறவழிப் போராட்டக்காரர்கள் அனைவரையும˙ உடன் விடுவிக்குமாறு தங்களைக் கோருகிறோம˙ .

# இயற்கையைப் பாதுகாக்க இளைஞர் அணி சத்தியப் பிரமாணம்





**(ஜதுர்சயன்)**

மட்டக்களப்பு வாவி உட்பட இயற்கையைப் பாதுகாக்கும் செயற்பாடுகளில் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் அதிடசங்கற்பத்தில் இளைஞர்களும் யுவதிகளும் சத்தியப் பிரமாணம் செய்துள்ளதாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஹபீப் முஹம்மது பாத்திமா சர்மிலா தெரிவித்தார். இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் விதத்தில் இளையோர் சமுதாயம் விழிப்புணர்வூட்டப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இது விடயமான கலந்துரையாடலொன்று மட்டக்களப்பு மையலம்பாவெளியில் சனிக்கிழமையன்று 20.08.2022 ஒருங்கிணைப்பாளர் பாத்திமா சர்மிலா தலைமையில் இடம்பெற்றது.

பொருளாதார நெருக்கடி மிக்க சமகாலகட்டத்தில் இயற்கை வளங்களைப் பாதுகாப்பது குறித்த விசேட கவன ஈர்ப்புக் கலந்துரையாடலாக இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிரதேசத்திலுள்ள சுமார் 25 இளைஞர் யுவதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

குறிப்பாக சூழல் சார்ந்த விடயங்களில் இளைஞர்கள் கரிசனை கொள்ள வேண்டும் என்பதில் செயற்திட்டம் பற்றிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. தற்போது மட்டக்களப்பைச் சூழ அமைந்துள்ள மட்டக்களப்பு நெடு வாவி மாசடைந்து கொண்டு வருகின்றது. இது இயற்கைக்கும் நீர் வாழ் உயிரினங்களுக்கும் மனிதர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. வாவி நீர் மாசடைந்து வருவதால் அதில் வளரும் மீனினங்களும் நோய்வாய்ப்படக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. அந்த மீன்களை உண்ணும் மனிதர்களும் உடல் உபாதைகளுக்கு உள்ளாகலாம். அந்த நிலைமயைத் தவிர்த்துக் கொள்ள வாவியைத் துப்புரவாக வைத்துக் கொள்ள வேண்டும் எனும் கருத்து அங்கு வலியுறுத்தப்பட்டது. இதற்கென செயற்குழுவொன்றும் உருவாக்கப்பட்டது. தற்போது மட்டக்களப்பு வாவியின் பெரும்பாலான நீர்ப்பரப்பு “பூங்கறை” எனும் ஒருவித பச்சைப் படையால் சூழப்பட்டுள்ளது. இது சில இடங்களில் துர்நாற்றத்தையும் வெளியிடுகிறது.





கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு நேற்று முன் தினம்(20) காரைதீவு கொம்பு சந்தியில் உறியடிக்கும் திருவிழா இடம்பெற்றபோது....

**(படங்கள் காரைதீவு நிருபர் சகா)**

# ஆதிவாசிகள் பெற்றோருக்கு விழிப்புணர்வு பட்டறை

சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோக நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் விழிப்பூட்டும் சிறுவர் நல வேலைத்திட்டங்களை சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார இராஜாங்க அமைச்சு முன்னெடுத்துள்ளது. இதற்கமைவாக நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் மாவட்ட ரீதியிலான இவ் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

“ஒரு நாளில் உன்னை மகிழ்விப்போம் “எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பிரதான நிகழ்வு கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் மதுரங்கேணிகுளம், குஞ்சங்குளம் ஆகிய கிராமங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகதருக்கான மாவட்ட இணைப்பாளர் வீ.குகதாசன் ஒருங்கிணைப்பில் உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரனின் வழிகாட்டலில் பிரதேசசெயலாளர் க.அருணன் தலைமையில், சிறுவர் உரிமை



மேம்பாட்டு உத்தியோகத்தர் அ.அழகுராஜ் ஏற்பாட்டில் குஞ்சங்குளம் ஆதிவாசிகள் கலாசார மண்டபத்தில் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பெற்றோர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்வு – (அரடவைஅநனயை உடனான திரையில் எனைநழ ஒளிபரப்பப்பட்டு, மகிழ்ச்சியான குடும்பம், இளவயது திருமணம், பாடசாலை கல்வி, மதுபாவனை பிரச்சனை, பெற்றோர் வெளிநாடு செல்வது தொடர்பான தெளிவூட்டல் பெற்றோருக்கு இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்ற இந்நிகழ்வில் குஞ்சங்குளம், மதுரங்கேணி இருந்து 180 பெற்றோர்கள் 20 சமூக குழு உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.